கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்
அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319485

1. District : இராமநாதபுரம் PS: இரா.தா.க பகிர்வு Year: FIR No.: 16/2025 Date: 13.08.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு (மு.த.அ. எண் நாள்)

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act, 2018 Sections பிரிவுகள்: 7(a) of P.C. Amendment Act, 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 12.08.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை மதியம் சுமார் 12.00 மணி

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 13.08.2025 Time : காலை 08.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) தொகுதி-II Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : ~~எழுத்து மூலம்~~ / வாய் மொழியாக / ~~மின்னணு வடிவம்~~ வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 80 கி.மீ தென்மேற்கு

Beat Number : (b) Address : கீழத் பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள
முறைக் காவல் எண் முகவரி நடபசிகுந்திச்சி கிராம சிறிவாக அலுவலர் அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : வெ.சின்ன அடைக்கள் (b) Father's/ Husband's Name : சுவள்ளைச்சாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 7?/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம் (g) Address : கடம்பங்கோம், தவசிகுந்திச்சி குடிப்,
தொழில் முகவரி கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பிரமானந்தி, கிராம சிறிவாக அலுவலர், தவசிகுந்திச்சி குடிப்,
கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் ஏதுமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : N.இராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 13.08.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி வெ. சின்னஅழகர் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, தவசிக்குறிச்சி குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பிரேமானந்த் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் வாக்குமூலம் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.16/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 13.08.2025 ஆம் தேதி 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்கு மூலம் பின்வருமாறு இன்று 13.08.2025

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

வெ.சின்னஅழகர்

13.8.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.08.2025 - 09.30 மணி

Name: பெயர் N. ராஜேஸ்வரி
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு,
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 16/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

ஆம் தேதி காலை 0800 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் (N.இராஜேஸ்வரி) இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது கமுதி தாலுகா, தவசிக்குறிச்சி குரூப், கடம்பங்குளம் கிராமத்தைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் வெ. சின்னஅழகர், வயது 72/2025 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது மனைவி சுப்பு லெட்சுமி என்பவர் உடல் நிலை சரியில்லாமல் கடந்த 01.07.2025 ஆம் தேதி இறந்து விட்டதால் வாரிசு சான்றிதழ் வேண்டி கடந்த 01.08.2025 ஆம் தேதி ஆன் லைன் மூலம் விண்ணப்பம் செய்து அரசு சேவைக்கட்டணமாக ரூ.60/- செலுத்தி அதற்கான ஒப்புகைச்சீட்டு பெற்றேன். இந்நிலையில் ஒருவாரமாகியும் வாரிசு சான்றிதழ் வராததால் நேற்று 12.08.2025 ஆம் தேதி காலை சுமார் 12.00 மணியளவில் கமுதி பஸ்ஸாண்ட் அருகே உள்ள தவசிக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்று VAO பிரேமானந்திடம் வாரிசு சான்றிதழ் பற்றி விபரம் கேட்க, அவர் ரூ.5000/- கொடுத்தால் தான் வாரிசு சான்றிதழ் பெற உடனே பரிந்துரை செய்வேன் எனக்கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை சார் எனச்சொன்னேன். அதற்கு அவர் ரூ.1000/- குறைத்து ரூ.4000/- கொண்டு வந்து நாளைக்கு (13.08.2025) என்னை பாருங்க, ஒரு வேளை நான் இல்லைன்னா எனக்கு போன் பண்ணுங்க நான் வரமுடியாட்டா கீழே உள்ள ஜெராக்ஸ் கடையில கொடுக்க சொல்றேன், நீங்க ரூ.4,000/- கொடுக்கலைனா வாரிசு சான்றிதழ் வாங்கிறது கஷ்டம் ரொம்ப நாளாகும் என கராராக சொன்னார். நான் அதற்கு எதுவும் பேசாமல் அங்கிருந்து வெளியில் வந்து யோசித்து பார்த்து கவர்மெண்ட் வேலையை செய்ததற்கு என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட தவசிக்குறிச்சி குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பிரேமானந்த் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, எனக்கு வாரிசு சான்றிதழ் பெற பரிந்துரை செய்ய என்னிடம் லஞ்சப்பணம் ரூ.4000/- கேட்ட தவசிக்குறிச்சி குரூப் கிராம நிர்வாக

அலுவலர் திரு.பிரேமானந்த் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்) வெ. சின்னஅழகர். Recorded before me (ஒப்பம்) (N.Rajeswari, Inspector, V&AC, Rmd) அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 13.08.2025 ஆம் தேதி 08.00 மணிக்கு கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து 09.00 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.16/2025 u/s 7 (a) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

13/8/25

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.